தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸு வைகாசிமீ 25உ (7-6-'22.) | ப. 7.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை		தேள்		பல்	
மார்	வலி	பாம்புக்	கடி	கால்	நோவு
முதுகு		பூச்சிக்		காது	
இடுப்பு		விஷக்		கை	

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்தர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி

தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட சந்தா
ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0
'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

ஸத்யாக்ரஹம்	50
P. R. இராஜமையர்	51
ஓர் விஷயம்.	53
சித்திரா-லீன் 2.	54
மாயக்கனிகள் (தொடர்ச்சி)	55

தமிழ் உலகு

துந்துபி௵ வைகாசி௴ 25உ

ஸத்யாக்ரஹம்.

சகோதரர்காள்! போன 1919ம் வருஷம் ஏப்ரல், 6ம் தேதி ஞாயிற்றைய தினம், திருவல்லிக்கேணி சமுத்ரக்கரையில், நாம் இதுவரையில் பார்த்திராத படி, அவ்வளவு ஜனங்கள் கூடினார்களே.—அது எதற்காக? ஹிமாசலம் முதல், கன்யாகுமாரி வரையிலும், ஹிந்துக்களும், மகம்மதியர்களும், ஒரேமனதுடன், எதற்காக அன்றைய தினம், ஆகாரமில்லாமல் உபவாஸமிருந்தார்கள்? எதைக் குறித்து, எந்த தெய்வத்தின் பிரீதிக்காக, நாமெல்லோரும் அந்த விருதத்தை அனுஸரித்தோம்?

அதின் காரணத்தைப்பற்றி, சற்று இங்கே பேசுவோம்.

இந்த நம்முடைய தேசத்தில், ராஜ்யம் யாரால், எப்படி நடத்தப்பட்டு வருகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஒவ்வொரு ஜில்லாவிலும், தலைமை அதிகாரி, டிஸ்ட்ரிக்ட் கலெக்டர். கலெக்டர்களுக்கு மேல், கவர்னர். கவர்னர்களுக்கும், லெப்டினன்ட் கவர்னர்களுக்கும் மேல், ஓர் கவர்னர்-ஜெனரல். இருக்கட்டும். நம்மை ரக்ஷிப்பதற்காக சட்ட திட்டங்கள் செய்கிறவர்கள் யார்? நாமே செய்து கொள்கிறோமா, அல்லது வேறு யாராவது செய்கிறார்களா? இவ்வளவு நாளாக, நம்முடைய பெரியோர்களின் இஷ்டத்தின் பேரில், சகல சட்ட திட்டங்களும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன என்றே நாம் நம்பியிருந்தோம். ஆனால் அது அப்படி அல்ல என அப்பொழுது தான் வெளியாயிற்று.

சென்ற 10, அல்லது 12 வருஷங்களாக, நம் தேசத்தில், அநேக உத்யோகஸ்தர்கள் வெடிமருந்துக்கும், துப்பாக்கிகளுக்கும், இரையானார்களென்பதை நாம் நன்கறிவோம். மேலும் பங்காளத்தில் அடிக்கடி, பயங்கரமான கொள்ளைகள், ரத்த வெள்ளத்துடன், நேருவதைக் கேட்டு மயிர் சிலிர்க்காதவர்கள் யார்? நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, பாடுபட்டுத் தேடிய திரவ்யத்தை, பலாத்காரமாக கொள்ளையடிப்பதென்றால், ஸத்யத்துக் கட்டுப்பட்ட எவன் தான் ஒப்புக்கொள்வான்? அப்படி கொள்ளையடிப்பவர்களுள், படித்துத் தேர்ந்த சில, நம் சிறுவர்களும், சேர்ந்திருப்பதைக்காட்டிலும், மிகுதியாக வ்யஸனத்தை உண்டாக்கக் கூடியது வேறென்ன? இப்படி அநியாயம் செய்பவர்களை தண்டிப்பதற்காகவும், விசேஷமாகக் கண்டிப்பதற்காகவும், கவர்ன்மெண்டார், ஓர் சட்டத்தை பாஸ் செய்தார்கள். ஆனால், பாஸ் செய்தாலும் என்ன?

எந்த ராஜ்யத்திலும், சீரும் அமைதியும் இல்லாவிடில், ஜனங்களின் க்ஷேமம் குலைந்து போய்விடும். ஒவ்வொருவருடைய ஐசுவரியத்திற்கும், சரீரத்திற்கும், ஹானியில்லாமல் பார்த்துக்கொள்வது ராஜாங்கத்தாரின் முதல் கடமையாகும். இதையொப்ப பிரஜைகளின் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அழிப்பவர்களை சிக்ஷை செய்ய, கவர்ன்மெண்டார் தீர்மானித்ததில், யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. சுகமாக இருக்கும் தேகத்தில் ஓர் புரை கண்டால், அதைமாத்திரம் ஆபரேஷன் செய்துஎடுக்கும் வைத்தியனை நிந்திப்பது அழகல்ல. ஆனால் அப்படிசெய்வதில், முக்கியமான மற்ற அங்கங்களை உயிரற்றதாகச் செய்வானேயாகில், அவன் வைத்தியம் செய்வதற்கே அர்ஹனில்லை. கவர்ன்மெண்டார் அராஜகச் செயல்களை, நிறுத்தும் விஷயத்தில், ஊக்கத்துடன் யத்தனித்ததானது அவர்களின் புத்தியைக் காட்டுகின்றது. ஆனால், அக்கவர்மெண்டார் பாஸ் செய்த சட்டம், கேவலமும் சரியானதாக இல்லை.

வைஸ்ராயின் சட்ட நிர்மாண சபையில், இதைக்குறித்து, பெரியதான வாக்குவாதம் நடந்தது. "கவர்ன்மெண்டார், அராஜகர்களான நம்முடைய சத்துருக்களின் பற்களை பிடுங்குவதற்கு மாத்திரம் அவசியமான சட்டங்களை ஸிருஷ்டிக்கப்பதில், நமக்கோர் அதிருப்தியுமில்லை. ஆனால் அச்சட்டங்கள் பொதுஜனங்களின் ஸ்வாதீனத்தை முழுவதும் கெடுத்துவிடுவதால், நாம் அவைகளை ஒருக்காலும், அங்கீகரிக்கமாட்டோம்" எனப் ஒரே மனசுடனும், தீர்மானத்துடனும், நம்முடைய பெரியோர்கள், நிர்ப்பயமாக, தங்கள் அபிப்பிராயத்தை யெடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவு முறையிட்டும், எவ்வளவு நல்வார்த்தைகள் கூறியும், செவிடர்கள் போல கவர்ன்மெண்டார் நடித்தார்கள். அவர்களின் வார்த்தைகள் பத்தியமாகத் தோணவில்லை. முடிவில், அராஜகக் கார்யங்களை நிறுத்துவதென்ற வியாஜத்தால், ஸகல ஜனங்களின் ஸ்வாதந்தர்யத்தை யபகரிக்கும் ஓர் இரக்கமற்ற சட்டம், நாம் தேர்ந்தெடுத்த புத்திமான்களின் தலையின்மீது, பாஸாயிற்று. இதற்கு "ரௌலட் ஆக்ட்" என இனிமையான நாமகரணத்தைச் செய்தார்கள்.

இருந்தாலும், இந்த சட்டம் அவ்வளவு அபாயமானதலல வென்று நினைத்தவர்களுமிருக்கிறார்கள். ஆகினும், யாரின் அபிப்பிராயங்களை நாம் இன்னமும் பதின்மடங்காக மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோமோ, அப்பெரியோர்கள் இச்சட்டத்தை ப்ளேக்கைப்போல வெறுத்தார்கள். வக்கீல் தொழிலில் தனக்குக் கிடைக்கும், ஏராள வருமானத்தை லக்ஷ்யம் செய்யாது விட்டு, இந்த தேசத்தின் மீது அளவற்ற பிரியத்தால், காசியில் கங்கைக்கரையின் ஓரமாக, ஓர் யூனிவர்ஸிடியை ஸ்தாபிப்பதில்சிந்தையுள்ளவராய், சுமார் 8வருஷம் உழைத்தவரான, ஸ்ரீமான் மாலவியா, இச்சட்டத்தைப் பற்றி என்ன நினைத்தார்? டிரான்ஸ்வாலில், இனிமேலும் இல்லாதபடி குரூரமாக அவமதிக்கப்பட்ட நம் ஸகோதரர்களான இந்தியர்களுக்காக, தான் சம்பாதித்த லக்ஷங்களைச் செலவிட்டு, மனது சலிக்காமல், தைர்யம் சிறிதும் குன்றாமல், எந்த கஷ்டங்களையும் பொறுத்து, ஸகல இந்தியர்களின் மீதும், பெற்று எடுத்தத் தாயாரைப்போல, அளவற்ற வாத்ஸல்யத்துடன். எல்லோருக்கும் முன் நின்று, ஒரு துளி இரத்தம்

கூட சிதறவிடாமல், பராக்கிரமசாலிகளான ஓர் அந்நிய கவர்ன்மெண்டாரோடு, எதிர்த்துக்கடைசியில் ஜெயத்துடன், ஒப்பற்ற கீர்த்தியால் அலங்கரிக்கப்பட்ட, மகாத்மாவான காந்தியும் இச்சட்டத்தைப்பற்றி என்ன நினைத்தார்? அல்லது, தன் மனதிலுதித்த மேன்மையான எண்ணத்தை, ஸாதிக்கும்பொருட்டு, தனது திரவியம்முழுமையும் செலவிடத்தயங்காமல், இந்தியர்களுக்குரிய தான படிப்பை மறுபடியும் ஸ்தாபிக்கும் எண்ணத்துடன், ஹரித்வாரத்தில் குருகுல வாஸத்தை ஏற்படுத்தி, அதில் ஆச்சரியமாக உழைத்து சுமார் 3 வருஷங்களுக்கு முந்தி, சிரத்தாநந்தர் என்ற பெயருடன் சந்யாஸியாக, உலகத்தைத்துறந்து இருக்கும், மகாத்மா முன்ஷிராமரும், இந்த ஹிருதயமற்ற சட்டத்தைப்பற்றி என்ன நினைத்தார்?

ஸந்யாஸிகளும், யோக நித்திரையிலிருந்து வெளிக்கிளம்பி, ஓர் அதர்மமான சட்டத்தை ஒடிப்பதற்காகப் பிரயத்தனம் செய்யவேணுமென்று, தீவிரமாய் நினைத்து, அதை எதிர்ப்பதற்காக ஆரம்பித்தார்களேயாகில், அச்சட்டத்தின் தன்மைதானாகவே விளங்குகின்றதல்லவா? 'அஹிம்ஸை', என்ற உயர்ந்ததான விரதத்தைக்கொண்ட, மகாத்மா காந்தி, இச்சட்டம் நம் ராஜ்யத்தில் நீடித்திருக்கும் வரையில், தான் தூங்குவதைக்கூட, தன் தேசத்திற்குத் துரோகமாக நினைத்தார் என்றால், அச்சட்டத்தின் கொடுங்கோன்மையை வேறு எதுதான் நன்றாக விளக்கக்கூடும்?

ஆகவே, இம்மகாத்மா காந்தி இந்த சட்டம் தொலையும் வரையில், உதாஸினனாக இருப்பதில்லையென்ற விருதத்தை யெடுத்துக்கொண்டார். "இந்த சட்டமோ தொலையவேணும்!" நாம் அதற்கு என்ன செய்திருக்கக்கூடும்? கவர்ன்மெண்டார் நம் வார்த்தைகளையும், நம் பிரார்த்தனைகளையும், கொஞ்சமும், லக்ஷியம் செய்யவில்லை. நாம் எப்படியாக, நம்முடைய தீவிரமான அதிருப்தியையும், வெறுப்பையும், இக்கவர்மெண்டாருக்குக்காட்டக்கூடும்? இக்கவர்ன்மெண்டார், "இனிமேலும் ஜனங்கள் வெறுப்படைந்தால், ஸாத்யமில்லை," என்று நினைக்கும்படி, நாம் என்ன செய்யக்கூடும்? அவர்களுடன் யுத்தம் செய்வதா? இல்லை. கத்திகளுடனும், துப்பாக்கிகளுடனும், சண்டைசெய்வது நம்முடைய விருப்பம் அல்ல. இந்த, கோரமான, ரத்தப்பெருக்குடன் கூடிய, யுத்தம் செய்வதானது ராக்ஷஸர்களின் வழி. இவ்வழியை பிறர்கள் அனுசரிக்கட்டும்! நாகரீகத்தின் கரையைக்கண்டு விட்டோமென்று, மமதையுடனிருக்கும், ஜெர்மன்களைப் போலொத்த ஐரோப்பியர்கள், கத்திகள், துப்பாக்கிகள், இவைகளுடன் யுத்தம் பண்ணுவதென்ற, அஸுரர்களின் வழியை யனுசரிக்கட்டும்! அவர்களே, இவ்வழியைக் கைப்பற்றட்டும்! அவர்களே இப்பயங்கரமான, யுத்தமென்ற, ராக்ஷஸத்தன்மையுள்ள வேசியிடம் அடிமைகளாகக் கிடக்கட்டும்! அவர்களின் தேசத்தில் வேணுமென்ற அளவு இப்பூண்டு செழிக்கட்டும்! நம்முடைய இப்பரதக் கண்டத்தில் இவ்வளவு நாகரீகம் படைத்த ஐரோப்பியர்களின், மகாநாகரீகமான, 'யுத்தம்' என்ற ஓர்நாகரீகம் நமக்குள் தேவையில்லை. மேல்நாட்டார் ஐக்கியம், தைரியம், பௌருஷம், சௌர்யம், தேச விசுவாசம், சாவிற்கும் துணிதல், அஞ்சாத நெஞ்சம், இவைகள் போன்ற மற்ற அமிருதமான குணங்களைக் கைப்பற்ற நாம் விரும்புகின்றோம். "ப்ரான்ஸ், ப்ரான்ஸ், ப்ரான்ஸ்," என்று, ப்ரெஞ்சுக்காரர்கள், எப்படி, லக்ஷம் லக்ஷமாக உயிரைத் துறக்கத் துணிந்தார்கள். அந்த அபூர்வமான, தீரத்தையும் என்றும் மாறாத தேச விசுவாசத்தையும், நாம் அபகரிக்க விரும்புகின்றோம். தங்கள் உயிருக்கு மேலாக அபிமானம் வைத்து, "தம் பிரிடிஷ் த்வீபத்தில், வேறு எவனாவது காலடிவைப்பதை, ஸஹிப்போமா," என்று இராப்பகல் தூக்கமில்லாமல், மின்னல்களிலும் இடிகளிலும் பெருங்காற்றுகளிலும், உள்ளிருக்கும் எலும்புகளைக் கூடத் தேயச் செய்யும் பனிதாரைகளிலும் விந்தியபர்வதங்களைப் போல் மிதந்துவரும் பனிமலைகளின் நடுவிலும், யுத்த கப்பல்களில், தங்கள் தேசத்தைக் காத்த பிரிடிஷ் புருஷஸிம்ஹங்களின் சௌர்யத்தையும், துணிவையும், தேசவிசுவாசத்தையும், நாம் அபகரிக்க விரும்புகிறோம். ஆனால் தங்கள் நாகரீகத்தைப் பற்றிப் பெருமை பேசிக்கொண்டே, ஸ்திரீகளையும், குழந்தைகளையும் ஸமுத்ரத்தில் மூழ்கடித்த அவர்களின் அபூர்வமான நாகரீகம் நமக்கு கொஞ்சங் கூடத் தேவையில்லை. அப்பொழுது, யுத்தமின்றி, நாம் எப்படி இக்குரூரமான ரௌலட் சட்டத்தைத், தொலைத்திருக்கக் கூடும்?

(தொடரும்)

ஸ்ரீமான் P. R. இராஜமையர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், முன் மதுரை ஜில்லாவைச் சார்ந்ததும் இப்போது இராமநாதபுரத்தைச் சார்ந்ததுமான வத்தலக்குண்டு என்ற கிராமத்தில் இந்த மஹா புருஷர் பிராமண குலத்திற் பிறந்தார். இவரது இளமைப்பருவத்தைப் பற்றி நமக்கு யாதும் தெரியவில்லை. மற்றைச் சிறுவர்களுடன் ஓடியாடி விளையாடித் திரியாமல் அப்போதுகூட வெட்கி ஒதுங்கி நடந்தவரென்று மட்டும் தெரிய வருகிறது. மதுரைக்கலாசாலையில் படித்து எப். ஏ. பரீக்ஷையில் தேறியபின், 1887ஆம் சென்னைப்பட்டணத்தில் கிருஸ்துவ கலாசாலையிற் சேர்ந்து படித்து 1889ம் வருஷத்தில் 17ம் வயதிலேயே பி. ஏ. பட்டம் பெற்றார். அடுத்த மூன்று வருஷங்கள் சென்னைசட்டக்கலாசாலையில் படித்தார் என்றாலும் அந்தப்படிப்பில் தன் முழு மனதைச் செலுத்தாமல் ஆங்கில பாஷையில் கவிஞர் முதலியோர் இயற்றிய நூல்களைப் பயின்று ஆங்கில கவிகளின் உண்மை ரஸத்தை நாடுவதாக இருந்தார். இவரும் உயர்ந்த அபிப்பிராயங்கள், கூரிய எண்ணங்கள், நுண்ணிய பொருட்கள் இவைகளை உடையவராதலால், "ஷேக்ஸ்பியர்", "பைரன்", "கீட்ஸ்", "ஷெல்லி", வேட்ஸ்வர்த்", "ஜார்ஜ் இலியட்" முதலிய பெரியோரின் நூற்களிலேயே மனமாழ்ந்திருப்பார். அவற்றிலும், "ஷெல்லி"யும் "வேட்ஸ்வர்த்"தும் இவருக்கு அதிகப்பிரியம். இயற்கை ரஸம், கவிதை யழகு, பொருளுண்மை, இவைகள் மேலிட்டு நின்ற கவிகளை வாசிக்க வாசிக்க இவருக்கு இவ்வரிய பொருட்கள் மேல் ஆசை அதிகரித்து அந்த ஆசை நாளடைவில் ஆத்ம தத்துவத்தை உணர விரும்பும் பேராசையாக மாறியது.

ஆனால், இக்காலத்திய தமிழ் மக்கள் பெரும்பாலரைப்போன்று ஆங்கிலப் படிப்பை மட்டும் ஆதரிக்காமல் தாயுமானவர் பட்டினத்தார் முதலியோரின் அருட் பாடல்களில் ஈடுபடுவதும் கம்பர் கவித்திறத்தையும் அறிய வல்லுநராய் "கம்பரினும் உயர்ந்த கவி உலகினில் இல்லை" என்று கொண்டாடுவதும் உண்டு.

"பைரன்" அகன்று பெரியதாய் அபார சக்தி வாய்ந்த சமுத்திரம் போன்றவர்; "கீட்ஸ்" சந்திரனிலும் இனிய காம விக்கிரஹம்; "ஷெல்லி" மண்ணுக்கும் விண்ணுக்கும் மத்தியில் ஆந்தரத்தில் தயங்கித்தத்தளிக்கும் தேவதூதன்; எல்லாவற்றையும் கலங்கலில்லா அமைதியுடன் ஒக்க இனிது நோக்கி விண்ணிலே தன்னொளி வீசு

நிற்கும் தாரகை போன்றவர் "வேட்ஸ்வர்த்," "டென்னிஸ"னே மண்ணிடைத்தோன்றிய மதுரகவி என்ற அவரவர் பலாபலமறிந்து விளங்கக்கூறிய இவர் மொழிகள் அந்த ஆங்கிலக்கவிஞரின் உண்மைப்பதவியை இவர் உள்ளபடி அறிந்தவரென்பதை காட்டுகின்றன.

இவ்வாறே, மேன்மையற்று இலக்கண விதிகளால் வீணே கட்டுண்டு இன்னொளி குன்றியிருந்த பிற்காலத்திய பாடல் முறைகளைத்தழுவி, வித்துவான் (பிரபோஸர்) அரங்கசாமி முதலியார் இயற்றிய "கச்சிக்கலம்பகம்" என்ற பாடலைப் பற்றி கிருஸ்துவ கலாசாலைப்பத்திரிகை (மாகஸின்) யில் இவர் எழுதிய வியாசத்தை வாசித்தவருக்கு 'கல்வியின் பயன் பெற்ற நுண்ணறிவாளர் இவர்' என்பதும் விளங்கும்.

இவர் கல்வியின் பயன் பிறர் இயற்றிய நூற்களை படித்து நில்லாமல் இவரையும் புதிய நூல்களை புனையும்படி செய்வித்தது.

"விவேகசிந்தாமணி" என்ற மாதாந்தப்பத்திரிகையில் இவர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்"* பல பகுதிகளாக வெளிவந்தது. அப்போது இவர் வயது இருபத்தொன்றே; உடன் அதை வாசித்த வித்வான் பி. சுந்தரம் பிள்ளை அவர்கள் "ஐரோப்பாவில் உயர்ந்ததென பெயர் பெற்ற பத்திரிகைகளிலும் பிரசுரிக்கத்தக்க மேன்மையானது இவர் எழுதிய கதை" என்று மெச்சினர் என்றால், அதின் பெருமையை ஒருவர் எடுத்துச் சொல்லவேண்டுமோ? அது எழுதப்பட்டபோது தமிழ்நாட்டில் "நாவல்"கள் என்பவை கிடையா. 'கமலாம்பாள் சரிதை'யே முதலில் எழுதப்பட்ட நாவல் என்னலாம். அதற்கு முன்னிருந்த "பிரதாப முதலியார் சரித்திரம்" உயர்தர நூலாயினும் அதை ஒரு "நாவல்" என்று சொல்ல முடியாது. ஆனால் இந்தக் காலத்திலோ மழைக்காலத்தில் வெளிவரும் ஈசல்போல் அநேக நாவல்கள் வெளிக்கிளம்புகின்றன. அப்படியிருந்தும் மனதைக் கவரும் சக்தியிலோ, தமிழ் நடையின் இனிய ருசியிலோ, நூலிலடங்கிய உயர்ந்த ஒப்பற்ற எண்ணங்களிலோ கதையின் ஸ்வாரஸ்யத்திலோ ஒன்றிலும் இதை வென்ற "நாவல்" ஒன்றை நாம் இதுவரைக் காணவில்லை. இவ்விதம் முப்பது வருஷங்களாகத் தலைமைபூண்டு நிற்கும் இந்த நூலை அநுசரித்து பிறர் எழுதாதது ஏனோ? மூன்றாம்தர வகுப்பில்கூட வைக்கத்தகாத ஆங்கிலக்கதைகளைத் திருடி அவைகளை குலைத்து மாறுபடுத்தி இன்னும் இழிவானவைகளாகச் செய்து "நாவல்"கள் என்ற பெயரையிட்டு வெளியிடுவதிலும் இந்த அரிய புஸ்தகத்தை நன்கு பயின்று அதை ஒரு முன்மாதிரியாகக்கொண்டு அதுபோல் ஒரு நூலேனும் இயற்றுவாரேல் அவருக்கு நாம் அதிக கடமைப்பட்டு இருப்போம்; இது நிற்க.

இந்த புஸ்தகத்தை வாசிப்பவருக்கு, ராஜமையருடைய மனது அப்போதே வேதாந்தத்தில் ஈடுபெற முயன்றது என்பது விளங்கும். அப்போது தான் அவர் வேதாந்த மதத்தின் ஆளுகைக்குள் போந்தார் போலும். அதின் பலனாக, வேறு 'நாவல்'கள் அவரால் எழுதப்படாமல் போனதும் தமிழில் அவர் அதிகம் எழுதாதிருந்ததும் பார்த்தால் ஒரு விதத்தில் நம்முடைய துர்பாக்கியமென்றே சொல்லவேண்டும். ஆனால் அவரோ, இப்படி வீணாக நூல்களைப் பெருக்குவதில் பயனில்லை, வேதாந்த முறைகள் மழுங்கி ஆங்கிலம் கற்ற தற்கால மனிதர்களால் அவமதிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த வேதாந்தத்தின் உண்மைப்பொருளை நாம் உணர்வதோடும் ஆங்கிலம் மட்டும் கற்று தமிழ் ஸமிஸ்கிருதம் இவை தெரியாததால் வேதாந்தத்தை அவமதிக்கிறவருக்கும் எளிதில்புலப்படும்படி செய்யவேண்டும் என்ற எண்ணங்கொண்டு வேதாந்த உண்மையை அறிய பல புஸ்தகங்களை வாசிப்பதும் பல வித்துவான்களை நாடுவதுமாக இருந்தார். இப்படி இரண்டு ஆண்டுகள் சென்றபின் 1895 ஆம் வருஷக்கடைசியில் தனக்குத் தகுந்த ஒரு குருவை நாடி அடைந்தார். 1896 வருஷம் "பிரபுத்த பாரதம்" அதாவது "எழுந்த இந்தியா" என்று பெயர்கொண்ட மாதப் பத்திரிகை ஒன்றைப் பிறப்பித்தார்.

"கவிகளை வாசித்தால் இன்பம் துன்பம் இரண்டும் உண்டாகின்றது. அலகிலா உலகின் பெருமையை அது எடுத்துக் காட்டும்போது மனிதனின் சிறுமையையும் வற்புறுத்துகிறது அன்றோ? கோடை நாள் பாலைவனம் முதலியவையும் உலகின்கண் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கவிகள் புகழ்ந்து கையாளுவதில்லை. கவிதையாலுண்டாகும் சுகம் சாலையின் வழியிலுள்ள சத்திரம் போலவும் கோவிலுக்குப் போகும் பாட்டையிலுள்ள மண்டபம் போலவும் தற்கால சுகமேயொழிய, வீடளிக்கும் திறம் அதற்குக்கிடையாது. மனிதனோ, இந்த அற்ப சுகத்திற்கும் மேலான பரம சுகத்திற்குப் பாத்திரமாய் பிறந்தவன். அழிவில்லாத அநாதி சுகத்திற்கு உரியவன். கோடை வெய்யிலையும் நிலவின் ஒளியையும் ஒன்றாகப் பாவிக்க வேண்டியவன்! துஷ்டரின் கொடுமையையும் சாதுக்களின் கருணையையும் துல்லியமாகக் கருதக் கூடியவன்! அழகார்ந்த அஸ்தமன ஸமயத்தை கண்டு களிப்பதும், பொழுது புலருமுன் ஆகாயத்தை அளாவி நின்று கூவும் குயிலின் குரல் கேட்டுப் பரவசமாவதும் போதாது. இயற்கை மாதுடன் கலந்து முழுதும் எடுத்துரைக்க வொண்ணாததாயினும் உள்ளே அடக்க முடியாததாய் வெளியே பொங்கி எழுகின்ற பேரின்பத்தை அடைந்து தானே அஸ்தமனமும் அஸ்தமிக்கும் சூரியனும் அவனுடைய ஒப்பிலா ஒளியுமாகி, பாடற் பறவையும் பாடிய பாட்டும் பாடி நின்ற ஆகாயமும் தானே என்ற உணர்ச்சி பெற்று அநுபவிப்பதே மனிதனின் பிறவிப்பயன்.

ஆகாயம் நக்ஷத்திரங்கள் மலைகள் ஆறுகள் முதலிய பெருமைகளையும் உள்ளுறையும் இந்திரியங்கள் மனது முதலியவற்றையும் ஆண்டு, இந்த இக வாழ்க்கையிலேயே எல்லையற்ற அம்பல சுகத்தில் மூழ்கித்திளைத்து, கர்ச்சிக்கும் கருங்கடலும் விண்ணையளாவும் மலைச்சிகரங்களும் ஒளிவீசும் தாரகைக் கணங்களும் ஒலித்து வீழும் அருவிகளும் எல்லாம் தானேயென உணர்ந்து களிப்பதே மனிதனின் கடமை; இவ்விதமாக சிருஷ்டியில் உயர்ந்து வேதங்களில் கூறப்பட்டுள்ள பரப்பிரமமே யாகி, கோபம் கபடு கொடுமை இவைகளைத் தவிர்த்து நின்று, புத்தியின் சஞ்சலத்தையும் இந்திரியங்களின் ஆவேகத்தையும் ஒழித்து மேன்பாடான விடுதலையை யடைந்து நிற்கின்ற மனிதனின் மனதில் சந்திர காந்தி போன்ற ஒரு அளவிலா ஆனந்தம் சர்வதா விளங்கும்" என்று இவர் சொல்லியிருக்கின்றார்.

"பிரபுத்த பாரதம்" என்ற பத்திரிகைப் பிறப்பித்த நாள்முதல் அதின் பத்திராதிபத்தைத் தானே தனியே வகித்து வந்தார். 'நடராஜன்' என்றும் "ரங்கநாத சாஸ்திரி" என்றும் வேறு அநேக பெயர்

* அநேக தமிழ் நூல்கள் இயற்றி இன்னும் இயற்றியிருக்கும் அ. மாதவையா அவர்கள் எழுதிய "பத்மாவதி சரித்திர"மும் ஏறக்குறைய இதேகாலத்தில் எழுதப்பட்டது என்று தெரியவருகிறது.

கள் கொண்டும் எழுதப்பட்ட வியாசங்கள் பலவற்றாலே அந்தப் பத்திரிகையின் பெரும்பான்மையையும்நிரப்பிஅதைப்பெருமையுறச்செய்தார். தான் பரமஞானத்தை அடைந்து அநுபவித்து எழுதிய வியாசங்களாலே, வேதாந்தத்தின் தூய நிலைமையையும் அதின் பெருமையையும் பொருளழகையும் பலவிதமான தப்பபிராயங்களாலும் தவறிய கொள்கைகளாலும் மறைக்கப்பட்டு விளங்காதிருந்த அதின் தத்துவார்த்தங்களையும் விளங்கக் காட்டினார். இவர் எழுதிய வியாசங்களிற் சில "வேதாந்தவிசாரணைகள்" (Rambles in the Vedanta) என்று புஸ்தக ரூபமாக வெளிவந்து, அது வேதாந்தத்தை உள்ளபடி அறிய விரும்புவோருக்கு சிறந்த சகாயமாக இருப்பினும் அதை பலரும் வாசிக்காதிருப்பதே நமது நாட்டில் வேதாந்த முறையை அறிய விரும்பாமல் திறனற்று நாம் இருப்பதை நன்கு புலப்படுத்துகின்றது.

வேதாந்தம் என்பது உலகவாழ்க்கைக்கு விரோத மல்ல. அதைக்கொண்டு லௌகிக சுகம் பெறலாம். இல்லறம் நடாத்தி சுகமும் பெறலாம். வேதாந்தத்தைப் பற்றி நமக்கு இப்போது இருக்கும் தப்பெண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் போக்கி உண்மையை அறியவேண்டும். மனிதர் எல்லோரும் சுகம் பெறவே உழைப்பவர்; ஆயினும், உண்மையை அறியாவிடின் நாம் சுகத்தை நாடுவதில் பிறருக்கு தீங்கு இழைத்தல் கூடும். பிறருக்குத் துயர் கொடாமல் கிடைக்கும் ஆனந்தமே பேரானந்தம். அதை யறிந்து நடப்பவனே வேதாந்தி; என்ற இந்த தத்துவங்களையெல்லாம் தன் வாழ்க்கையால் விளக்கினவர் இராஜமையர்.

இவர். ஜனங்களோடு அதிக கல கலப்பாய் இராததால், இவர் பெயர் மட்டும் பலர் கேட்டிருந்தாலும் இவருடைய வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. "வீடுகள் நிறைந்த சென்னைப் பட்டணத்திலே, காட்டிலே போல பிறர் தன்னை அறியாமலும் தானே தன்னை மறந்தும் ஆத்மஒளியை நாடி நடக்கமுடியும்" என்று அடிக்கடி இவர் செல்வராம். தன் குருவினிடம் தவிர பிறரிடம் இவர் அதிகம் பேசுவதில்லை. எண்ணுவதையும் பேசுவதையும் பெரும்பாரம் என்று நினைத்து தியானத்திலேயே ஆழ்ந்திருப்பார். பக்தி பொங்கி யெழுந்த பாடல்களையும் வேதாந்த நூல்களையும் மட்டும் சில வேளை வாசிப்பதானார். "பிரபுத்த பாரத" மென்ற பத்திரிகையை நடத்துவதுகூட இவருக்கு ஒரு இடையூறாகத் தோன்றிற்று.

ஆனால் பிறருடன் சகஜமாகப் பேசாவிட்டாலும் தன்னைப் பார்க்க வந்தவர்களுடன் இனிது சம்பாஷித்து நன் மொழிகள் பேசி உற்சாகமாக இருப்பார், இவரை அறிந்த அநேகருக்கு இவர் ஒரு ஊன்று கோல் போலவும் இருந்தாராம்.

இவருடைய நுண்ணிய அறிவையும் ஆனந்த அநுபவத்தையும் கொண்டு தமிழில் "பிரபோத சந்திரிகை" என்ற பெயர் புனைந்து வெளியிட வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறு முன் இவர் காலம் நெருங்கியது.

(பிரும்மவித் ஆப்நோதி பரம்) "பிரமத்தை அறிந்தவன் பரத்தை அடைகிறான்" என்ற இவர் கொள்கைக்கிணங்க, 1898௵ மேமீ 13உ யன்று இவர் பரம்பொருளை யடைந்தார். ஞானம் முதிர்ந்தபின் இளம் வயதினரேனும் பெரியோரானவர் நெடுநாள் இங்கு தங்குவதில்லை யல்லவா?

இவர் யோகாநுஷ்டானத்திலே பிசகு உண்டானதால்இளமையிற் மரித்தார் என்று சொல்வார்சிலர். அந்த வசை நீங்கவே இவரருகிருந்த நண்பரொருவர் "மூக்கைப் பிடித்து மூச்சையடக்கி ஒன்றும் இவர் நிஷ்டைகள் செய்யவில்லை" என்று உடனே எடுத்துரைத்தார். அப்படி இல்லாவிடினும், முயலாதிருப்பதினும் முயன்று தவறுவது மேலன்றோ? கீதையில் ஆறாவது அததியாயத்தில் "யோகத்தில் நழுவியவன் என்னகதியடைகிறான்" என்று கேட்ட அர்ச்சுனனுக்கு "அவனுக்கு நாசமென்பதே கிடையாது. நல்லது செய்தவன் துர்கதியடைவனோ? புண்ணியபலன் அநுபவித்து, பிறகு சாதுக்கள் வீட்டில் பிறந்து பூர்வாப்பியாஸத்தால் யோகமார்க்கத்தில் தடையின்றிச் சென்று இறுதியில் பரகதியடைகிறான்" என்றார் கிருஷ்ண பகவானும்.

ஒரு விஷயம்

அந்தகன், செவிடன் இவ்விருவருள் எவன் அதிக துக்கத்தை அனுபவிப்பவன் என்றும் விஷயத்தைப் பற்றிச்சமீபத்தில் ஒருவர் எழுதுகிறார்.

கண்ணிழந்தவர்களைக் காணும்பொழுது நாம் மிகுந்த அனுதாபப்படுகிறோம். ஆனால் கேட்கும் திறமை யற்றவர்களைக் கண்டால், நமக்கு எளிதில் கோபமே உண்டாகின்றது. உண்மையாய், இவ்விருவருள் நாம் பார்த்து இரங்கக் கூடியவன் யார்? மனோத் ஸாகத்தை யளிக்கும் சூரிய வெளிச்சத்தையும், இவ்வுலகிலுள்ள பல அதிசயங்களையும் அழகையும் கண்டுகளிக்கப் பெறாத்துற் பாக்கியனிவனென்று அந்தகன் நம் மனதில் மிகுந்த தயையுண்டாக்குகிறான். நேத்திரானந்தம் பெற்றிருக்கும்மற்றவர்களுடன் தங்கு தடையின்றி அவனும் ஓடி ஆடத் திறமையற்றவனா யிருப்பதைக் காண நாமடையும் பரிதாபம் இவ்வளவென்று சொல்ல முடியுமோ? அவன் உலகில் உயிர்தரித்திருப்பதே பிறருடைய உதவியினாலாகவேண்டியிருக்கின்றதல்லவா? ஆனால் இவனைக்காட்டிலும் இன்னும் அதிக துரதிர்ஷ்டமுள்ளவனான செவிடனுடைய துன்பத்தை நாம் தெரிந்துகொள்ளவில்லை. இப்பெருங் குறைவுடன் அவன் பஞ்சேந்திரியங்களும் பெற்ற பாக்கியவந்தர்களின் மத்தியில் காணப்படுவதால், அவன் மீது வேண்டியவளவு இரக்கம் நம்மால் காட்டக்கூடாதது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

காது, கண் இவ்விரு புலன்களிலும் காதே அதிக முக்கியமானது. பகலிலும், வெளிச்சத்திலும் மட்டுமே கண்கள் வேலை செய்கின்றன. ஆனால் இரவு பகல் இரு காலங்களிலும் நாம் காதுகளின் உதவியை யடைகிறோம். கண் செய்யக் கூடாத எச்சரிக்கையை காதுகள் நமக்குப்புரிகின்றன. எதையும் நிர்ணயிருக்கும் சக்தி காதுக்கே உண்டாகின்றது. வெளிச்சத்தின் சிறிது மாறுபாட்டால், ஓர் கயிற்றையும் பாம்பென எண்ணி நாம் மோசம்போகலாம். ஆனால் காது அவ்வளவு எளிதில் ஏமாற்றப் படக்கூடியதல்ல. அதை வஞ்சிக்க வேண்டுமாயின்,சிறிதும்மாறுபாடின்றி, ஒன்றைப்போலொன்று சப்திக்கவேண்டும். ஆயினும்,அப்பொழுதும் மோசம்போவது சாதாரணமாய்க்காதல்ல. ஏனெனில், சப்தம் எதனின்றும் உண்டாகின்றதோ, அதுமாறியிருக்கவேண்டுமேயன்றி, அச்சப்தத்திற்கொரு மாறுதலுமுண்டாயிருக்க மாட்டாது. உதாரணமாக, யாராவது கோழியைப்போல், சிறிதும் வித்தியாசமின்றிக் கூவினால், நாம் அதைக் கோழியென்றே நம்புகிறோம். ஆனால் அந்நம்பிக்கை நமக்குண்டாவது எப்படி யெனில்—இக்குற்றம் நம் கண்ணைச் சேர்ந்ததே-அச்சப்தத்தை ஒரு கோழியினுருவத்துடன்சேர்த்துதியானம் செய்வது கண்தானாகை

யால், காது ஓசையை மட்டும் அறிந்துகொள்ளும் வேலையைச் செய்கின்றது. ஏதாவது ஊனம் ஏற்பட்டாலன்றி, காது ஒரு போதும் ஒன்றை மற்றொன்றாக எண்ணி ஏமாந்து போவதில்லை. எப்பக்கத்திலும் பார்க்கும் சக்தி கண்ணுக்குக் கிடையாது. ஆனால் காதுக்கு அச்சக்தி இருப்பதுடன், உண்மையாய் கேட்பதனின்றும் அதைத்தடுப்பதே முற்றிலும் முடியாதகாரியம்.

கண்ணையிழந்தவர்களுக்கு அவர்களுடைய மற்ற இந்திரியங்கள் சுபாவத்தைவிட இன்னும் கூர்மையாக ஆகின்றன. வாசனையறியும்தன்மை உணர்ச்சியின் நுட்பம், கேட்கும் திறமை இவையாவும் முன்னிலும் பலப்படுகின்றன. ஞாபகசக்தி ஆழ்ந்து யோசிக்கும் பெருமை இவை தேர்ச்சியடையும் விதமும் ஆச்சரியப்படக் கூடியது. இதன் உண்மையாதெனில், கண்ணானது நமது அமைதியைக் கலைக்கும் இந்திரியமென்பதே. எப்பொழுதும் சலித்துக்கொண்டிருப்பதனால், நமது கவனத்தை அங்கு மிங்கும் அலைக்கழித்து எவ்வளவோ விஷயங்களை நாம் அறியவொட்டாமலது செய்கின்றது. ஆயினும் இக்குற்றத்தை நாம் கண்ணின்மீது சுமத்தலாகாது. கடவுளளித்த ஓர் உயர்ந்த வரத்தைச் சரியான வழியில் உபயோகியாத மனிதர்களை யல்லவா நாம் குறை கூறவேண்டும்? அந்த கர்களைப்போல், கேட்கும் பாக்கிய மற்றவர்கள் தங்கள் குறைவு மற்றெதனாலும் தீர்க்கப் படாமலிருக்கிறார்கள். கண்ணிழந்தவர்களுக்கு நாமளிக்கும் உபகாரத்தைப் போல், செவிடர்களுடைய பெரும் ஊனத்தைத் தீர்க்க நாம் செய்வது எது தான் பிரயோஜனத்தை யுண்டாக்க முடியும்?

(தொடரும்)

சித்திரா.

ஸீன் 2.

அர்ச்சுனன்—நான் கண்டது கனவோ, அல்லது அந்நதியின் கரையில் நான் பார்த்தது உண்மைதானோ? புற்றரையின்மீதுட்கார்ந்து நான் சாயந்திரம் கடந்த வருஷங்களைக்குறித்து யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, இருள் சூழ்ந்த மரங்களுக்கிடையிலிருந்து அழகே உருவெடுத்துவந்த வளென ஒரு பெண்மணி மெதுவாய்க்கிளம்பி ஜலக்கரையே ஒரு வலவைக்கல்லின்மேல் வந்து நின்றாள். அவளது மிருதுவான பாதத்தைத் தாங்க பூமியும் உள்ளம்பூரிக்கவேண்டும் போல தோன்றியது. பனி புரைந்த கீழ்த்திசை மலையின் முகட்டிலிருந்து சூர்யோதயத்தின் பொன் நிறமான இளம் வெய்யலானது மெதுவாய் மறைவதே போல், அவளணிந்திருந்த மெல்லிய வஸ்திரமும் அவள் சரீரத்தின் மேற்படும் பாக்கியத்தைப்பெற்ற களிப்பில் பறந்து காற்றுடன் கலந்து விடுமென எண்ணலானேன். அவள் குனிந்து, தெளிந்த ஸ்படிகம்போன்ற ஜலத்தில் தன் பிரதிபிம்பத்தை ஒரு நிமிஷம் நோக்கியதும், திடுக்கிட்டு மிகுந்த ஆச்சரிய முற்றவளைப்போல் அசைவற்று நின்றாள். பிறகு சிறிது புன்னகையுடன் சற்று அசட்டையாகவே அவள் தன் கூந்தலை அவிழ்த்துவிடவும் அது அவள் காலடியில் விழுந்து புரண்டது. தன் மேல் வஸ்திரத்தை அப்புறம் தள்ளி, சிறிதும் குற்றம் குறைவின்றி அமைக்கப்பட்டு, பால்போலும் வெண்மையான நிறத்தையுடைய கைகளையும், மார்பையும் பார்த்துக்கொண்டாள். குனிந்து, வெகு இனிமையாய் புஷ்பம்போல் மலர்ந்துவரும் தன் யௌவனத்தையும், அதிமிருதுவான தேககாந்தியையும் நோக்க, அவள் கண்கள் சந்தோஷத்தாலும், அதிசயத்தாலும் விரிந்தன. இவ்விதமாகவே, காலையில் சூரியன் உதித்தவுடன் தன்னிதழ்களைத்திறந்து, ஒரு வெண் தாமரை முகுளமும், மிக அழகாய் வளைந்த கழுத்துடன் தன் நிழலை ஜலத்தில் பார்த்து அதிசயிக்குமல்லவா? ஆயினும் ஒரு நிமிஷத்திற்குப் பிறகு, அவள் உதடுகளிலரும்பிய புன்னகைமறைய, ஒரு விசனகரமான பார்வையும் அவள் கண்களிற் தோன்றியது. கீழே புரண்டுகொண்டிருந்த கூந்தலைத் தூக்கி முடிந்து, தோளிலிருந்து நழுவிய வஸ்திரத்தையும் சரியாயணிந்துகொண்டு அவள் மெதுவாய் ஒரு பெருமூச்செரிந்து, வெகு மனோகரமான சந்தியாவேளை இரவிற் சென்று மறைவதுபோல் அவ்விடத்தைவிட்டுச் சென்றாள். பரிபூர்ணமாய் நிறைவேற்றப்பட்ட மனோரதமானது பளீரென என்முன் தோன்றி உடனே மறைந்து விட்டதுபோல் எனக்குத் தோன்றியது.—இரு, கதவை யாரோ திறப்பதுபோல் சப்தமுண்டாகிறது. யாரங்கே?

சித்திராபெண் வேஷத்தில் வருகிறாள்

ஆஹா! அப்பெண்மணி இவளே. மனமே! சாந்தமாயிரு. பெண்ணே! என்னைப்பார்த்து பயப்படவேண்டாம். நான் ஒரு க்ஷத்திரியனென்றறிந்துகொள்.

சித்திரா—ஐயா! இன்று நீர் என்னுடைய அதிதி. இக்கோவிலில் நான் வசிக்கின்றேன். எவ்விதமாய்த் தம்மை வரவேற்பதென்பது எனக்கு விளங்கவில்லை.

அர்ச்சுனன்—அழகிய பெண்மணியே! உன்னுடைய தரிசனமொன்றே எனக்குயர்ந்த நல்வரவையளிப்பது போலாகின்றது. நீ குற்றமாகக் கொள்ளாதிருப்பாயாயின், நான் உன்னை ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன்.

சித்திரா—தாம் கேட்பதில் எனக்கொரு ஆக்ஷேபணையுமில்லை.

அர்ச்சுனன்—இத்திவ்விய சௌந்தரியத்தைக் காணும் பாக்கியத்தை ஒருவரும் அடையாவண்ணம் அபகரித்து, இத்தனிமையான கோவிலில் அடைந்து கிடைக்கும்படியாய் நீ மேற்கொண்ட கடுமையான விருதமென்ன?

சித்திரா—என் ஹிருதயத்தில் ஒரு ரகசியமான ஆசையுள்ளது. அது நிறைவேறும் பொருட்டு நான் பரமசிவனை இவ்வாலயத்தில் தினமும் ஆராதிக்கின்றேன்.

அர்ச்சுனன்—ஆஹா! இம்மூவுலகங்களும் பெறற்கரிய உயர்ந்த விருப்பம்போன்ற நீ விரும்பக்கூடியதும் இப்பூமியின்கண் இருக்கின்றதோ? முதன் முதல் சூரிய கிரணங்களால் ஸ்பரிசிக்கப்படும் முகட்டையுடைய கீழ்த்திசை மலையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் தேசம் வரையும் நான் பிரயாணம் செய்திருக்கின்றேன். இப்பூதலத்தில் எதெது அருமையும், உயர்வும், லாவண்யமு முள்ளதோ, அவை யாவையும் நான் பார்த்துள்ளேன். நான் பிரயாணம் செய்த பயன்முழுமையும் நீ பெற்றுக்கொள். நீ விரும்புவது என்னவென்பதை மட்டும் எனக்குக் கூறு.

சித்திரா—நான் விரும்புபவர் யாவருக்கும்தெரிந்தவரே.

அர்ச்சுனன்—அப்படியா? உன் ஹிருதயத்தைவ கவரக்கூடி பெருமை வாய்ந்தவன்—அத்தெய்க் கடாக்ஷம் பெற்ற பாக்கிய வந்தன் யார்?

சித்திரா—இவ்வுலகத்தி லிருக்கும் ராஜ வம்சங்கள் யாவற்றிலும் அதிகக் கீர்த்தி பெற்ற குலத்திற் பிறந்துள்ள அவர், வீரருள் பெரும் வீரராவார்.

அர்ச்சுனன்—பெண்மணீ ! பொய்ப் பெருமையின் பொருட்டு இந்த உன்னுடைய என்றும் அழியா சௌந்தரிய செல்வத்தை நீ அர்ப்பணம் செய்ய வேண்டாம். அஸத்யமான கீர்த்தியானது அதிகாலையில் சூரியனுதிக்கும் முன்னால் பரவும் பனிபோல் எங்கும் வியாபிக்கிறது. ஆயினும், உலகில் முதன்மையானவோர் ராஜ குலத்தி லுதித்து, யாவரினும் மேன்மையான சௌர்யம் பொருந்திய வீரனுயிருப்பவன் யாவனென்பதை நான் தெரிந்து கொள்ளலாமா ?

சித்திரா—துறவியே ! பிறருடைய புகழைக் கேட்கத்தாம் பொறுமை கொள்ளுகிறீர். இப் பூமண்டலத்தில் எல்லாவற்றினும் பெருமை வாய்ந்தது குரு வம்ச மென்பதைத் தாம் அறிந்ததில்லையோ ?

அர்ச்சுனன்—குரு வம்சமா ?

சித்திரா—ஆம் ; அப்புகழ் பெற்ற குலத்திற்றேன்றிய மிகச்சிறந்த பெயரையும் தாம் ஒரு போதும் கேட்டதில்லையா ?

அர்ச்சுனன்—உன்னுடைய வாயிலிருந்தே நான் அதைத் தெரிந்து கொள்ளுவேன்.

சித்திரா—பூலோகம் முழுமையும் ஜயிக்கவல்ல அர்ச்சுனனே அவர். பல பெயர்களுடைய வாய்களினின்றும் அவ்வழியாத பெயரைக் கேட்டு நான் என் சிறு ஹிருதயத்தில் பிறறியாமல் அதை வெகு கவலையுடன் போற்றி வருகிறேன். ஐயா ! தாம் ஏதோ யோசிப்பது போல தோன்றுகிறது. அப்பெயரின் பிரகாச மெல்லாம் வெறும் வெளித் தோற்றமா? நீரப்படிச் சொல்லி விட்டால், என் மனதாகிய பேழையைத் திறந்து இப்பொய்யான ரத்தினத்தைத் தரையிலெறிந்து விட ஒரு நிமிஷமேனும் தாமதிக்க மாட்டேன்.

அர்ச்சுனன்—அவன் பெயர், புகழ் வீர்யம், பராக்கிரமம் இவைகள் பொய்யாயினும், உண்மையாயினும் ஆகுக, நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்; உன்ஹிருதயத்திலிருந்து நீ அவனைப் புறக்கணிக்காதே. ஏனெனில், இந்நிமிஷத்திலும் உன்முன் அவன்பணிந்து நிற்கிறான்.

சித்திரா—நீர்தானு—அர்ச்சுனன்?

அர்ச்சுனன்—ஆம் அவனே. உன்னன்பைவேண்டி உன் முன் நிற்பவன்.

சித்திரா—அப்படியாயின், அவர் பன்னிரண்டு வருஷகாலம் பிரும்மசரிய விருதம் பூண்டிருக்கிறுரென்பது உண்மையில்லை யல்லவா?

அர்ச்சுனன்—அப்படியல்ல. இருள் சூழ்ந்த இரவின் விருதத்தை சந்திரன் அழிப்பதுபோல, நீயும் என் சபதத்தை யொழித்து விட்டாய்.

சித்திரா—இதுமிகுந்த வெட்கம்! என்னைப்பார்த்துத்தம்விஷயத்திலேயே நீர் பொய்யாகமாறும் படியாய் என்னிடம் தோன்றுவதென்ன? தன் பிம்மசரிய விருதத்தின் பலனை நீரிழக்கச்சித்தமாயிருக்கும்வண்ணம் இவ் வெண்மை நிறத்தையுடைய கைகளில்—இக்கரு நிறம்வாய்ந்த கண்களில் தான் நீரெதைக் காண்கின்றீர்? உண்மையாக என்னையல்ல வென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இது உண்மைக் காதலாயிருக்க முடியாது. ஒரு புருஷன் ஒருஸ்திரீக் களிக்கும் மேன்மையான கௌரவமும் இதுவல்ல. அந்தோ! வெறும் உருவெளித் தோற்றம்—இச்சரீரமானது என்றும் அழிவற்ற பெருங்குணத்தின்பிரகாசத்தைக் காணவொட்டாமல் மனிதர்களைக் கண்ணிமுந்தவர்களாகச் செய்யவேண்டுமா? அர்ச்சுனராஜனே! இப்பொழுது தான் உம்முடையவீர்யத்தின் பெருமையானது பொய் யென்றறிந்தேன்.

அர்ச்சுனன் :—புகழின் சிறப்பும், போர்த்திறமையின் பெருமையும் சிறிது பிரயோஜன மற்றவை யென்று நான் நினைக்கிறேன். எல்லாம் ஒரு கனவு போல் எனக்குத்தோன்றுகிறது. நீ மட்டுமே களங்கமற்றவளாய்ப் பிரகாசிக்கிறுய். உலகத்தில் பெறற்கரிய செல்வம் நியே. மனிதர்களியற்றும் பெரும் முயற்சிகள் யாவற்றிற்கும் பலன் போன்ற நீ பெண்ரூபத்தில் தோற்றுகிறுய். வெகுகாலத்திற்குப் பிறகே நமக்குவிளங்கக்கூடிய தன்மையையுடையவர்கள் பலரிருக்கின்றுர்கள். ஆனுல் உன்னை ஒரு நிமிஷம் தரிசிப்பதானது நான்முகனின் சிருஷ்டித் திறமை யாவும் குறைவின்றி பூர்த்தி பெற்றதை ஒரே தடவையாகக் கண்டு களிப்பது போலாம்.

சித்திரா ;—அந்தோ ! அது நானல்ல. நானல்ல. இது ஒரு தேவதையியற்றிய மாயம். வீரனே! போய்வருவீர். பொய்யைப் போற்றிவணங்காதேயும். தம்து பெருந்தன்மையான ஹிருதயத்தை வீண்வெளித் தோற்றத்திற் களிக்க வேண்டாம். போய்வருவீர்.

மாயக்கனிகள்.

(தொடர்ச்சி)

அவன் விருக்ஷத்தை அடைந்து பார்த்தபொழுது தனது மனைவிக்கு பதிலாக ஒரு கருத்து பருத்த ஸ்திரீ இருப்பதைக் கண்டு "எங்கே எனது கண்மணி, எனது ஆசைக்கிளி" என்று கவலையுடன் கேட்டான்.

வேலைக்காரியும் " நான்தான் உன் இனிய ராஜகுமாரி. நீ போயிருக்கும்பொழுது ஒரு கெட்ட தேவதை வந்து என்னை விகாரமாக செய்தது, என்ன செய்வது" என்று கோரமான குரலில் சொன்னுள்.

'ராஜகுமாரன் வாக்குக் கொடுத்து விட்டோம் இவள் நமது மனைவி' என்று நினைத்து அவளை மரத்திலிருந்து கீழே இறக்கினுன். அந்தப்புரச் சேடிகள் அவளை வெறுப்புடன் நோக்கினுர்கள். எஜமானனுடைய கட்டளைப் பிரகாரம் இந்த விகாரமான வேலைக்காரியை அழகிய ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் அணியும்படி செய்து நல்ல புஷ்ப மாலைகளையும் சூட்டினுர்கள். ஆனுல் குரங்கிற்கு பூமாலை இட்டதுபோல் விளங்கினுள் வேலைக்காரி.

ராஜகுமாரன் அவளுடைய கையைப் பற்றி தனது பிதாவின் முன்னுலழைத்து வந்தான். அரசனுடைய ஆச்சரியத்திற்கு கோரளவில்லை. அவன் 'குமாரா, உனக்கு பயித்தியம் பிடித்து விட்டதா என்ன! அழகு வாய்ந்த பெண்ணையல்லவோ கொண்டுவருவதாகச் சொன்னுய். இவள் காட்டிலிருந்து பிடித்துவந்த கருங்குரங்கை போலல்லவோ இருக்கிறுள் " என்று கோபத்துடன் கடிந்துபேசி தனது அறையில்போய் படுத்துக்கொண்டார்.

வேலைக்காரியோ என்றுல் தனக்கேற்படுத்தப்பட்ட அறையில் உட்கார்ந்து தனது தோழியையொருத்தியைப் பார்த்து சில சிற்றுண்டிகளைக் கொண்டு வர ஏவிக்கொண்டிருக்கையில் ஓர் வெள்ளைப் புறு அழுதுக்கொண்டே வருவதைப்பார்த்தாள். உடனே தனது சேடியைப் பார்த்து அதைக்கொல்லும்படி ஏவ, அவளும் அதைப்பிடித்து கொல்வதற்காக அரண்மனைத் தோட்டத்திற்கு சென்றுள். அனுல் அந்தப் புறுவை கொல்லும்பொழுது மூன்று சொட்டு ரத்தம் பூமியில் சிந்தியது.

ராஜகுமாரன் இச்சங்கதிகளையெல்லாம் தனது அறை ஜன்னல் வழியாய் பார்த்திருந்து, சேடி போனதும், மூன்று மாஞ்செடிகள் ரத்தம் விழுந்த இடங்களில் முளைப்பதைக் கண்டு, அவ்விடத்திற் கோடினன்.

உடனே அவைகளில் பூப் பூத்தன. அவை காயாகி, பழமாகிக் கண்ணைக் கவர்ந்துதொங்கின. ராஜகுமாரன் மூன்று பழங்களைப் பறித்து, வெள்ளிக்கத்தியை எடுத்து ஒவ்வொன்றாய் நறுக்கினன். முதல் பழத்திலிருந்து ஒரு ஸ்திரீ முன்போல் தோன்றி தனது தாகம் தீராததால் மறைந்தனள். இரண்டாவதிலிருந்தும் ஒருவள் தோன்ற அப்படியே மறைந்தனள். மூன்றும் பழத்திலிருந்து தனது காதலி வெளிப்பட்டாள். அவள் தனக்கு அவ்வேலைக்காரியால் நேர்ந்த தீங்கையெல்லாம் அவனுக்கு எடுத்துக் கூறினாள்.

ராஜ குமாரனும் ஆநந்தம் மேலிட்டவனாய் குதிக்க வாரம்பித்தான். இந்த இரைச்சலைக்கேட்டு அரசன் வெளி வந்து "குமாரா! பயித்தியம் பிடித்து விட்டதா என்ன! ஏன் களிக்கிறாய்" என்றார்.

"இல்லை அப்பா! எனது ஆசை நாயகியை மறுபடியும் கண்டதால் குதித்தேன்" என்று சொல்லி அரசனுக்கு ராஜ குமாரியைக் காண்பித்தான். அவரும் சந்தோஷமடைந்து, அவள் அகப்பட்ட விதத்தை அவனிடம் கேட்க, அவன் நடந்த வரலாற்றை முழுவதும் விவரித் துரைத்தான்.

அரசனும் அத்துஷ்ட வேலைக்காரியை தண்டிக்க ஆவல் கொண்டு, அந்த அழகிய ராஜ குமாரியை துணியால் மறைத்து கலயாண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான்.

அங்கே சிம்மாசனத்தில் வீற்றிருந்த வேலைக்காரியைப் பார்த்து அரசன் "பெண்ணே! நீ நாளைக்கு அரசி ஆவாய். ஆனலிப்பொழுது, எனது புத்திரனுடையமனைவிக்கு தீங்கிழைப்பவர்களை என்ன செய்யலாம் சொல்" என்று கேட்டான்.

உடனே அவள் பரபரப்புடன் உரத்த குரலில் "அப்பேற்பட்ட பாதகர்களை காளவாயில் வேகவைத்துக்கொன்றாலென்ன" என்றாள்.

அரசன் சிரித்துக் கொண்டே "குரூரசித்தமுடையவளே! நீ தானாகவே உனது சாவை வெளியிட்டாய்" என்று சொல்லி துணியினால் மூடப்பட்டிருந்த ராஜகுமாரியை எல்லோருக்கும் காண்பித்தான். அந்த சுந்தரியைப் பார்த்தவரெல்லோரும் "என்னஅழகு, என்ன அழகு, இவள் தேவகன்னிகையே" என்று சொல்லி ஆச்சரியமடைந்தனர்.

உடனே விகார ரூபமான அந்த வேலைக்காரி அரசனது பாதங்களில்விழுந்துமன்னிப்புக் கேட்டாள். ராஜகுமாரி முன்வந்து "மகாராஜாவே தாங்கள் இவளுடைய உயிரை எனக்கு பரிசாக கொடுக்க வேண்டும்' என்று வேண்டினாள். அரசனும் "உன்னுடைய இஷ்டம்போல்" என்றார்.

கூடியசீக்கிரத்தில் ஒரு சுபமுகூர்த்ததில் ராஜகுமாரனுக்கு கல்யாணம் விமரிசையாய் நடந்தேறியதை இங்கு சொல்லவேண்டியதில்லை. நமது கதை வாசிப்பவரே அறிந்து கொள்வார்களல்லவா?

சுதேசியமானது!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். அக்காலத்தில் துண்டுபிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS

(சென்னை விளம்பரங்கள்).

10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27" × 17" மேற்படாத

பிரகடனங்கள்

ஜட்காவண்டி

மேற்கூரையில் ஒட்டுவதற்கு

நூற்றுக்கு

தினத்திற்கு ரூ. 5-0-0

வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.